திரு. சு. பாலன்: சென்னை மாநகராட்சி மஸ்டர் ரோல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள் மீண்டும் வழக்காடுவதற்கு உயர்நீதி மன்றம் சென்றிருக்கிறார்கள். ஆகவே அதுபற்றிப் பேசலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்குமன்றத்தில் இருப்பதைப் பற்றிப் பேசக் கூடாது.

திரு. மி. வின்சென்ட்: இந்த வழக்குகள் துரிதமாக நடைபெறவும், சமுதாயக் குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் சில பணிகளை அரசு மேற்கொள்ளத் தயாராகவுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சமூக விரோதச் செயல்களில் யார் ஈடுபட்டாலும் கண்டிப்பாகத் தண்டிக்கப் படுவார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சென்னை நகரையே உலுக்கிய இந்த மஸ்டர் ரோல் வழக்கின் மீது தண்டனை அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே நீண்டகாலமாகவே நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற மாநகராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கனவே இது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: இந்த மஸ்டர்ரோல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள் ஜாமீனில் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஜாமீன்களை ரத்து செய்துவிட்டு அவர்கள் தண்டிக்கப்படுவார்களா? அத்தவறு காரணமாக எடுக்கப்பட்ட பணத்தைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படுமா?

(பதில் இல்லை)

சௌடார்பட்டி அருகே உள்ள அணை.

*நட்ச. வி எண் 26—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருமங்கலம் தொகுதியில் உள்ள சௌடார்பட்டி அருகே உள்ள அணை எப்போது சேதமடைந்தது?

(ஆ) அது எப்போது செப்பனிடப்படும்?

1980 ஜூலை 18]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இந்த அணை நவம்பர் 1979-ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்தது,

(ஆ) வெள்ளத்தினால் சேதமடைந்த இவ்வணையை செப்பனிடும் வேலை விரைவில் மேற்கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இந்த அணை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளம், புயல் காரணமாக சேதமடைந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இந்தத் தொகுதி அமைச்சர் அவர்களுடைய தொகுதியாக கடந்த காலத்தில் இருந்தபோதிலும் கூட அது செப்பனிடப்படாத காரணத்தினால் இப்போது பருவமழை பெய்ய ஆரம்பிக்கும் சூழ்நிலையில் வெள்ளம் வருவதற்கு முன்னாலேயே இந்த அணை சீர்படுத்தப்படுமா? இதற்காக எவ்வளவு ரூபாய் செலவாகும்?

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இந்த அணை கட்டுவதிலே மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு அறிந்த பிறகு, ஆய்வு வேலை துரிதமாக மேற்கொண்டு, இந்த ஆகஸ்டு மாதத்திலேயே பணியைத் துவக்குவதற்கு இருக்கிறது. எனவே, ஆய்வுப் பணி சீக்கிரத்திலே முடிக்கப்பட்டு, ஒரு மாதத்திற்குள் பணி துவங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே இவ்வளவு விரைவாக முயற்சி எடுப்பதற்கு நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால், அதே நேரத்தில் இந்தப் பருவ மழை துவங்குவதற்கு முன்னாலே நிச்சயமாக இந்த அணைகட்டி முடிக்கப்படுமா? அப்படி கட்டப்படவில்லை என்றால், தற்காலிக ஏற்பாடாக அந்த வெள்ளம் வரக்கூடிய அந்தப் பகுதி மக்களுக்கு நெல் சாகுபடிக்குத் தண்ணீர் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டிலே இடதுபுற கால்வாயின் சுவர் 300 அடி வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு சேதமடைந்திருக்கிறது. எனவே, ஆகஸ்டு மாதத்தில் துவக்கப்பட்டு, உடனடியாக முடிக்க முடியுமென்பது சாத்தியமல்ல. ஆனால் மேலும் தற்காலிக தடுப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, அதைத் தொடர்ந்து தண்ணீர் விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.